**OS No.201/2024**

**PW– 1–பட்டத்துராணி**

**க/பெ.செல்வக்குமார்**

**நாள். 31.07.2026.**

**வாதி தரப்பில் சாட்சி மீண்டும் வரவழைக்கப்பட்டு சத்தியபிரமாணத்தின் பேரில் 3–ம் பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை .**

1.நான் பத்தாம் வகுப்பு படித்துள்ளேன். எனக்கு தமிழ் எழுத படிக்க தெரியும். தாவா சொத்தை நான் யாரிடமிருந்து கிரையம் வாங்கினேன் என்றால் முனிராஜ் என்பவரிடமிருந்து கிரையம் வாங்கினேன். ரூபாய் 7 இலட்சத்திற்கு கிரையம் வாங்கினேன். கிரையத் தொகையை வங்கி மூலமாக செலுத்தினேன். அந்த பத்திரத்தை அடமானம் வைத்து ICICI வங்கியில் நானும், எனது கணவரும் சேர்ந்து கடன் வாங்கினோம் என்றால் சரிதான். கடன் விண்ணப்பத்தில் நானும் ஒன்றாம் பிரதிவாதியும் சேர்ந்துதான் கையொப்பம் செய்தோம் என்றால் சரிதான். ஒப்படைப்பு பத்திரமும் நானும் எனது கணவரும் சேர்ந்துதான் எழுதிக் கொடுத்தோம்.

2. அந்த பத்திரத்தின் அசல் ஆவணங்களை நானும் எனது கணவரும் சேர்ந்துதான் திரும்ப பெற்றோம் என்றால் சரிதான். நானும் எனது கணவரும் சேர்ந்து சீனிவாசன் என்பவருக்கு கிரையம் கொடுத்துள்ளோம் என்றும் அந்த சீனிவாசனை தெரியுமா என்றால் தெரியாது. நானும் எனது கணவரும் சேர்ந்து தான் சீனிவாசனுக்கு கிரையம் கொடுத்தோம் என்றால் சரிதான். இரண்டாம் பிரதிவாதி முறையான மறுபயன் கொடுத்து தான் என்னிடம் கிரையம் பெற்றுள்ளார் என்றால் சரியல்ல. வழக்குக்காக நான் பொய் சாட்சியமளிக்கிறேன் என்றும், இரண்டாம் பிரதிவாதியிடமிருந்து மறு பயன் பெற்று தான் அவருக்கு கிரையம் கொடுத்தேன் என்றால் சரியல்ல.

3.அந்த கிரையத்தை தொடர்ந்து மூன்றாம் பிரதிவாதியிடம் அவர் முறைப்படி கடன் பெற்றுள்ளார் என்றால் சரியல்ல. மூன்றாம் பிரதிவாதி ஆவணங்களை சரிபார்த்து முறைப்படி இரண்டாம் பிரதிவாதிக்கு கடன் கொடுத்துள்ளார்கள் என்றால் சரியல்ல. அதன்படி தாவா சொத்தின் மூல ஆவணங்களை இரண்டாம் பிரதிவாதி, மூன்றாம் பிரதிவாதியிடம் ஒப்படைப்பு செய்துள்ளார் என்றால் சரியல்ல. எங்கள் குடும்ப பிரச்சனை காரணமாக சொத்தின் மூலம் அநியாய லாபம் அடைய வேண்டி இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளேன் என்றும், மூன்றாம் பிரதிவாதிக்கு எதிராக இந்த வழக்கு தள்ளுபடி செய்யப்பட வேண்டும் என்றால் சரியல்ல. இரண்டாம் பிரதிவாதிக்கு எழுதிக் கொடுத்த கிரைய பத்திரத்தை நான் படித்துப் பார்த்து தான் கையொப்பம் செய்தேனா என்றால் ஆமாம். எனவே நான் கோரிய பரிகாரம் எனக்கு கிடைக்கத்தக்கதல்ல என்றால் சரியல்ல.

**மறுவிசாரணை இல்லை.**

சாட்சியின் வாக்குமூலமானது என் முன்னிலையில் பதிவு செய்யப்பட்டு, படித்துக் காண்பிக்கப்பட்டது. சாட்சி சரியாக உள்ளதென ஒப்புக் கொண்டு கையொப்பமிட்டார்.

H.Mohamed Ansari

Digitally signed by H.Mohamed Ansari
Date: 2026.07.31 13:07:50 +0530

முதன்மை சார்பு நீதிபதி,
திருப்பூர்.